செ.வெ.எண் 69 நாள்: 27.06.2018

# பெரம்பலூர் மாவட்டம்

## பிறப்பு, இறப்பு நிகழ்வுகள் கட்டாயம் பதிவுசெய்யப்பட வேண்டும் - மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அழகிரிசாமி அவர்கள் தகவல்.

இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:

பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தில் நிகழும் பிறப்பு-இறப்பு மற்றும் தத்து குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ்களை உடனடியாக பெற, தங்கள் பதிவுகளை முறையாக மேற்கொள்ளவேண்டும்.

பிறப்பு-இறப்பு நிகழ்வுகள் கட்டாயம் பதிவு செய்திருக்க வேண்டும். பிறப்புச் சான்றிதழ் (குழந்தை பெயர் இல்லாமல்) மற்றும் இறப்புச் சான்றிதழ் பிறப்பு-இறப்பு பதிவாளரிடமிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். பிறப்பு-இறப்புச் சான்றிதழ் நகல் பெற ஒன்றிற்கு தலா ரூ.200/- வீதம் செலுத்தவேண்டும். மேலும் அனைத்து கர்ப்பிணி தாய்மார்களும் PICME எண் பெற்றிருந்தால் மட்டுமே பிறப்புச் சான்றிதழ் பெற இயலும். பிறப்பு-இறப்பு நிகழ்வுகளை உடனுக்குடன் பதிவு செய்து சான்று பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், குழந்தை இல்லாத பெற்றோர் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்தோ அல்லது உறவினரிடமிருந்தோ குழந்தைகளை தத்து எடுத்துக்கொள்ளலாம். தத்து கொடுப்பவர்களும், தத்து எடுப்பவர்களும், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துகொண்டால் போதுமானதாகும். பிறப்பு சான்றிதழில் தத்து என்ற வார்த்தை இன்றி பிறப்பு சான்று வழங்கப்படும். பொதுமக்கள் சட்டவிரோதமாக குழந்தைகளை வாங்குவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். அவ்வாறு மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.